## வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2015

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 22 ஆம் இலக்க வனசீவராசிகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட வனசீவராசிகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 71(2)(ஏ) இன் கீழ் வழங்கப்படுகின்ற கட்டளைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வானொலி அலைவரிசைக் கட்டணத்திற்காக செலுத்தவேண்டிய ரூபா 449,155 தொகையும், நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,341,000 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹுணுவிலகம சிற்றுண்டிச்சாலை மற்றும் புத்தக விற்பனை நிலையம் என்பவற்றின் நிர்மாணித்தல் செலவினமான ரூபா 1,934,033 தொகை கட்டிடமாக மூலதனமாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கட்டிடம் பழுதுபார்த்தல் செலவினமாக முன்னைய ஆண்டில் சீராக்கப்பட்டிருந்தது.

### 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

சேவைக் கட்டணம் ரூபா 11,032,522 தொகை மூன்று வருடங்களாக மீதியாகக் காணப்பட்ட போதிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2008 மார்ச் 05 ஆந் திகதிய வஜீ/6/1/2/458/11 ஆம் இலக்க வனசீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | உதவிப் பணிப்பாளரினால் (மஹாவலி) மன்னம்பிட்டியை அண்மித்ததாக மஹாவலி கங்கையில் மணல் அகழுதல் தொடர்பாக மேற்பார்வை செய்து, அது தொடர்பான அறிக்கையொன்று ஒவ்வொரு வாரமும் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் அந்த நியதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 ஒக்தோபர் 08 ஆந் திகதிய வஜீ/2/01/01 ஆம் இலக்க வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | தேசிய பூங்காக்களில் கணனி மூலம் நுழைவுச் சீட்டுக்களை விநியோகிக்கும் போது, மின்சாரமின்றிய சந்தர்ப்பங்களில் பொது 172 காசுப் பற்றுச்சீட்டு விநியோகிக்கும் போது ஏற்படக்கூடிய |

| | | |
|---|---|---|
| | | மோசடிகளைத் தவிர்ப்பதற்காக மின்பிறப்பாக்கி இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதனைப் பயன்படுத்துதல் தொடர்பாக வழங்கப்பட்ட ஆலோசனைக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஎவ்டி/04/08/01/59 ஆம் இலக்க அரசாங்க நிதித் திணைக்களத்தின் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | மன்னம்பிட்டியை அண்மித்த பகுதியில் மணல் பெறப்படும் போது ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவை பொருத்தமான பிரகாரம் அரசிறையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களுக்கு ரூபா 46,225,450 ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 942,005,927 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 735,934,278 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 206,071,649 தொகையான அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது. பூங்கா நுழைவுக் கட்டண வருமானம் ரூபா 263,225,311 இனால் அதிகரித்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது. முன்னைய 5 வருடங்களின் பங்களிப்பை கவனத்தில் கொள்ளும் போது அதில் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காண்பித்திருந்தது.

### 3.2 செலவினங்களின் அசாதாரண அதிகரிப்பு

2015 ஆம் ஆண்டினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது யானைப் பட்டாசுகளின் கொள்வனவுச் செலவினம் ரூபா 18,017,935 இனாலும், சேவைக் கட்டண செலவினம் ரூபா 31,266,478 இனாலும் அதிகரித்திருந்தன. எவ்வாறாயினும் விலங்குகளினால் 63 உயிரிழப்புக்கள் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிதியத்தின் பணிகளாக,

- வன விலங்குகளைப் பாதுகாத்தலும் பாதுகாப்புத் தொடர்பில் பொது மக்களின் ஆர்வத்தை விருத்தி செய்தலும்.
- வன விலங்குகளைப் பாதுகாத்தலும் பாதுகாத்தல் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட சகல பிரதேசங்களையும் பராமரித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் முன்னேற்றுதல்.

*	சுய அதிகாரங்களை பிரயோகிக்கும் போது அல்லது அதிவிஷேட திறமை அல்லது அச்சமற்ற தன்மையை ஏற்படுத்திய உத்தியோகத்தர்களுக்கும், பொது மக்களுக்கும் பணிக்கொடைகள் அல்லது வெகுமதிகளை வழங்குதல்.

*	வன விலங்குகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் 11 ஆவது பட்டோலையில் குறிப்பிடப்பட்ட ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் கீழ் ஏற்படும் தவறுகள் காரணமாக எவரையேனும் குற்றவாளிகளாக்குவதற்கு முறையாகவோ அல்லது வேறு எவ்விதத்திலோ அறிவிப்பவர்கள் எனும் வகையிலோ அல்லது வேறு விதத்தில் பொறுப்பானவர்களாக உருவாகியிருப்பவர்களுக்கு பணிக்கொடை அல்லது வெகுமதி வழங்கல் மற்றும் சகல நோக்கங்களுடனும் தொடர்புடைய எல்லா விடயங்களையும் முன்னேற்றுவதும் அபிவிருத்தி செய்வதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ)	நீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் சூரியகதிர் மின் நீர் பம்பிகளின் 03 அலகுகளை யால வனப்பூங்காவில் பொருத்துவதற்கு ரூபா 1.8 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	தர்சனவெவ மற்றும் கருவலகஸ்வெவ போன்ற குளங்களை மீள்நிர்மாணம் செய்வதற்கும் 04 சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்கும் முறையே ரூபா 13 மில்லியன் மற்றும் ரூபா 73 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் போது அவை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)	2014 ஆம் ஆண்டு முதல் யால பதவியணியினர் சுற்றுலா விடுதியில் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பற்றாக்குறையினால் அவைகள் பாவனையற்றிருந்ததுடன் அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு 2016 மே மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 86 வாகனங்களுக்கு காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 5,823,516 தொகையினை திணைக்களத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)	காட்டு யானைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் "12 போர்" சுடுகலன்களையும் 7,500 இறப்பர் ரவைகளையும் கொள்வனவு செய்வதற்கு 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ரூபா 4,178,965 தொகை இலங்கை இராணுவத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த இறப்பர் ரவைகளின் இருப்பினை 2016 மே 11 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	2014 யூன் 30 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட நில்கல சுற்றுலா விடுதி கணக்காய்வுத் திகதியான 2016 மே 20 வரையிலும் பாவனையற்றிருந்ததுடன் செலவிடப்பட்ட ரூபா 3,291,392 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது. 02 வருடங்கள் அளவிலான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டமையால் அந்தக் காலத்தில் நிதியத்திற்கு பெறமுடியுமாக இருந்த வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. விடுதியைப் பயன்படுத்தாமைக்கான

காரணமாக சமையலறையொன்று காணப்பட்டிருக்காமை எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 764,699 தொகை செலவில் சமையலறையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 11,727,309 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீவல சுற்றுலா விடுதி அதற்குச் செல்வதற்கான வீதியில் வசதியீனங்கள் காணப்படுகின்றமையாலும் சுற்றுலா விடுதிக்கு நிரந்தர நீர் வழங்கல் காணப்படாமையாலும் 02 வருடகாலமாக அது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 4.4 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நிதியத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக மீளாய்வாண்டில் கலண்டர் மற்றும் நினைவூட்டல் பதிவேடுகளை அச்சிடுவதற்கு ரூபா 3,025,974 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2013 ஆம் ஆண்டின் போது ரூபா 14,456,219 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மஹவெவ சுற்றுலா விடுதி சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குச் செல்வதற்கான வீதியில் வசதியீனங்கள் காணப்படுவதன் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் இந்த விடுதி பாதுகாப்பற்று 2 வருடங்களாக மூடப்பட்டிருந்தது.

### 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கிராந்துருக்கோட்டை யானைக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்குச் சொந்தமான கெப் வண்டி 2015 மே 06 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த விபத்தினால் வாகனத்திற்கு அண்ணளவாக ரூபா 300,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 11 செலவின விடயங்களில் ரூபா 11,092,437 தொகை குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 07 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 8,878,352 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தின் பாதீடு 2016 மார்ச் 04 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டடிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்களைத் தீர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) அங்கம்மெடில்ல தேசிய பூங்காவில் யானைகளைத் தடுத்து வைத்தல் மற்றும் யானைகளை வெளியேற்றும் மேடை என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 4,574,919 தொகை செவலிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) மன்னார் பதவியணியினர் விடுதி, வன விலங்குகள் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் தொழிலாளர் உத்தியோகபூர்வ விடுதி என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,630,360 பெறுமதியில் 2011 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் இறுதிக்கு முன்னர் வேலைகளைப் பூர்த்திசெய்யும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ரூபா 1,933,200 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியிலும் செயற்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுபாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| (அ) | தண்டப் பணம் சேகரித்தலும் மிகையூதியப்படி செலுத்துதலும் | தண்டப் பணம் பெறுவனவு உரிய படி குறித்த வருடங்களின் பிரகாரம் இணங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஆ) | ஆவணங்களைப் பேணுதல் | கணனி பதிவேடு, அடியிதழ்சேர் புத்தகப் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலைகள் பேணப்படாமை. |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |
| (ஈ) | இருப்புக் கட்டுப்பாடு | பிரதேச அலுவலகங்களில் இருப்புப் பதிவேடு உரிய பிரகாரம் பேணப்படாமை |
| (உ) | நுழைவுச்சீட்டுக்கள் விநியோகித்தல் | கணனி மூலம் நுழைவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படாத சந்தர்ப்பங்களில் மோசடியாக பணத்தைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டமை மற்றும் பெறப்படுகின்ற பணத்தின் சரியானதன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களும் செலவினங்களுக்கும் இடையே முரண்கள் காணப்பட்டமை. |